உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 7 | நவம்பர், டிஸம்பர் 1925 | ப 11-12

தெய்வ வணக்கம்.

அறனது புரிந்தென்ன மறைமொழி தெரிந்தென்ன
அணிபுகழ் விரிந்தென்ன நூல
ஆகமம் கற்றென்ன யோகமும் பெற்றென்ன
அரியபிணி யற்றென்னசீர்
உறுதவம் முடித்தென்ன முறைபல படித்தென்ன
உனதருளை யடையாதவர்க்
குறுதியிலை இம்மையினும் மறுமையினும் மன்னுபலன்
ஒன்றுமிலை ஆதலாலென்
வறுமை குற்றந்தீர்ந்து நிறையருட்கண் பார்த்து
மனசைத்திருத்திநல்ல
வழிகாட்டி யென்னைநீ ஆளுதற் கிதுசமயம்
மவுனசரவணபவகுகா
திறலவுணர் படையன்று முறியமுனிவொடுசென்று
செருவினில் முடிக்கிவென்று
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமரகுருவே.

மாம்பழக்கவிச்சிங்க நாவலர்

ஹிதோபதேசம்.

எப்போதும் காலத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி காரியங்களைச் செய்யவேண்டும். இல்லையானால் துன்பமுண்டாகும். காலத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி நடப்பவனே நன்மையடைவான்.

முன்காலத்தில் ஒரு காட்டில் ஒரு சிங்கம், ஒரு நரி, ஒருகழுதை ஆகிய மூன்று மிருகங்களும் ஒன்றாய்க்கூடி வாழ்ந்தன. மூன்றுக்கும் ஒருநாள் இரையகப்படவில்லை. ஆகையினால் அவைகள் காடுகாடாகத் திரிந்து அங்கங்கே கண்ணுக்குப் புலப்பட்ட மிருகங்களைக்கொன்று அவைகளைத் தங்களுடைய காட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தன. அப்பால், சிங்கம் கழுதையை நோக்கி, "நண்ப, இந்த உணவை நம் மூவருக்கும் சரியாய்ப் பிரித்துவை" என்று கூறியது. கழுதை, அந்த உணவைத் தராசில் நிறுத்ததுபோல் சரியாய் மூன்று பாகமாகப் பிரித்து வைத்தது. அதுகண்ட சிங்கம் சினங்கொண்டு கழுதையின்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அதனைக் கொன்று தின்று ஏப்பம் விட்டுக்கொண்டே, நரியைப் பார்த்து, "நண்ப, நீ பிரித்துவை இந்த உணவை" என்றது. நரி தந்திரமும் புத்திக்கூர்மையுமுடைய பிராணியாதலால், "இதோ பிரித்துவைக்கிறேன்!" என்று கூறி அந்த உணவில் முக்காலே மூன்றுவீசம் பங்கை ஒரு பங்காகவும் வீசத்தை ஒருபங்காகவும் பிரித்து முக்காலே மூன்றுவீசத்தைச் சிங்கத்திடம் வைத்து, "பிரபு! புசித்தருளவேண்டும்" என்று கூறியது. சிங்கம் பார்த்து ஸந்தோஷமடைந்து, "நண்ப, நீ நல்ல புத்திசாலி! கணக்காய்ப் பிரித்திருக்கிறாயே! உனக்கெப்படி தெரிக்

தது இது? இந்தக் கணக்கை யாரிடமிருந்து நீ கற்றுக் கொண்டாய்' என்று கேட்டது.—நரி, "பிரபு, கழுதையினிடமிருந்து கற்றுக்கொண்டேன்!" என்று கூறியது. சிங்கம் ஸந்தோஷமடைந்து, "உணவைப் புசி" என்று உபசரித்துத் தானும் தன் உணவைப் புசித்து ஸந்தோஷமடைந்தது.

நரி உணவை உண்டபின், "காலத்துக்கும் இடத்திற்கும் தக்கபடி காரியங்களைச் செய்யவேண்டும் என்பதை இன்று கண்டுணர்ந்தேன். இனி இந்த இடத்தில் நாமிருப்பது கூடாது. இந்தச் சிங்கத்தின் ஸ்நேகம் நமக்கேற்றதல்ல. ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் நாம் கழுதையின் கதியை அடைய நேரிடும். தகாத இடத்து ஸ்நேகத்தைவிட்டு நீங்குவதே மதி!" என்று சொல்லிக் கொண்டேயிருந்து சமயம் பார்த்து அந்தச் சிங்கத்தை விட்டு ஓடிவிட்டது.

ஈசுவரன் எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் இல்லாத இடமில்லை. அவர் உன்னுள்ளே இருந்து வருகிறார். நீ எங்கே சென்றாலும் அங்கும் உன்னைத் தொடர்கிறார். நீ எந்தச் செய்கைசெய்தாலும் அதைக் கவனிக்கிறார். பாப காரியங்களைச் செய்தால் அவரை நீ அவமதித்தவனாவாய். கடவுளை அவமதித்தவன் நன்மையை யடையமாட்டான். புண்யச் செய்கைகள் செய்துவரும் புண்யாத்மாக்களையே அவர் விரும்புகிறார்; அவர்களையே தன்னுடைய பக்தனாகக் கொள்கிறார்; கடவுளுடைய அன்பர்க்குச் சகல நன்மைகளும் உண்டாகும். ஆதலால் எப்போதும் பாபச்செய்கைகளை மறந்து புண்ணியச் செய்கைகளில் நினைப்பைக்கொண்டு சமயம் நேரும்போதெல்லாம் அவைகளைச் செய்து நல்லவனாயிருக்க முயற்சி செய்! "உத்தமனாயிரு"

நக்கீரனார்.

இவர் மதுரை கணக்காயனாருடைய அருந்தவப் புதல்வர்; கடைச்சங்கத்தில் இருந்த செந்தமிழ்ப்புலவர்களில் சிறந்து விளங்கியவர்; முடத்திருமாறன் என்னும் பாண்டியன் கடைச்சங்கங் கண்டபோது வசித்து வந்தவர்.

பூர்வகாலத்தில், நமது தேசத்தில், அறம் பொருள் இன்பம் என்னும் புருஷார்த்தங்களை இனிமையாகவும் சுலபமாகவும் விளக்கவல்ல தமிழ்ப்பாஷையை அபிவிருத்திக்குக் கொண்டுவரத் தமிழ்ச்சங்கங்கள் ஏற்பட்டு வந்தன. கடைசியாய் நிலைத்த கடைச்சங்கத்திற்குத் தலைமையான இடம் மதுரை. இந்தச்சங்கம் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்தது. நெடுஞ் செழியன், உக்கிரப்பெருவழுதி முதலிய பாண்டிய மன்னர்கள் இதனைப்பரிபாலித்து வந்ததுடன் தமிழ்ச் சுவை கண்ட தக்க விற்பன்னரை ஆதரித்தும் வந்தனர்; அவர்கள் மூலமாகத் தமிழ் நாட்டிற்குப் பயன்படும் நூல்களும் வெளிப்படுத்தினர்.

இப்புலவர்களிலே தலைமை வாய்ந்த நக்கீரர் சைவ வேளாள கணக்கர் ஜாதியைச் சார்ந்தவர்; சைவ மதத்தைத்தழுவிய மேதாவியர். இவரது சரித்திரம் முற்றும் சரிவரத்தெரிவதற்குப் போந்த ஆதாரங்கள் கிடைத்தில. தமிழில் இவரடைந்து வந்த புகழால் இவரைத் தெய்வப்புலமை வாய்ந்தவரென்று தெரியலாமேனும்.

இவரது ஜீவிய காலத்தில் இராஜ்ய பாரந்தாங்கி வந்த பாண்டிய பூபதி, ஒரு நாள் தன் மனைக்கிழத்தி

புடன் மாளிகை மேல்மாடியில் உலாவினன்; அப்போது நறுமணம் வீசக்கண்டான்; நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்தான்; வாசனைதரக்கூடிய பொருள்களொன்றும் அங்குப் புலப்படவில்லை. நெடுநேரந் தன் கவனத்தைச் செலுத்தியும் அப்பரிமளத்திற்கு ஆதாரம் இன்னதென்றறியக் கூடவில்லை.

பின்னர் அவன் தன் மனைவியைக் கவனிக்கலுற்றான்; நன்மணம் அவள் கூந்தலினின்றும் வருவதறிந்தான்; அப்படி வருவதற்கு அந்தக் கூந்தலில் செயற்கை வாசனை பூட்டப்பட்டுளதாவென்று கூர்ந்து பரிசோதித்தான். அச்சோதனையாலும் அவனுக்கு உண்மை விளங்கவில்லை. பெண்மக்களின் கூந்தலுக்கு வாசனை இயற்கையிலுண்டா என்கிற சந்தேகம் அவனுடைய நெஞ்சிற் பலமாய்க் குடிகொண்டுவிட்டது. அதை நிவர்த்தித்துக் கொண்டாலொழிய தன்மனம் சமாதானம் அடையாதென்று தெரிந்து கொண்டான்.

அரசர்களுக்கு இது போன்ற ஐயப்பாடுகள் உண்டானால் அவர்கள் அவற்றைத் தமது சமஸ்தானப் பண்டிதர்களால் தெளிவித்தறிவது வழக்கம். உண்மைப் புலவர்கள், தெய்வீகத்தன்மையு முடையவர்களாதலால் அப்படிப்பட்ட சந்தேகங்களை வெகு சுலபமாக விளக்க வல்லவராவர். இப்படி விளக்குவதைக் 'கண்ட சுத்தி' அல்லது 'கண்ட சித்தி' என்று சொல்லுவர்.

இவ்வழியையும் பாண்டியன் முயன்று பார்த்தான். தெய்வ சங்கற்பத்தால் தன் சமஸ்தானப் புலவரொவரும் தான் கொண்ட சந்தேகத்தை நீக்கும் சக்தி யுள்ளவர்களா யில்லாதிருப்பதைக் கண்ணுற்றான். உடனே

பொன் முடிப்பொன்று கட்டி, அதனைத் தன் சபாமண்டபத்தில் ஒருபுறந் தொங்கவைத்து, ''இதனால் சகலமானவர்க்குந் தெரிவிப்ப தென்னவென்றால்:— மண்டலாதிபதியாகிய பாண்டிய மகாராஜா ஒரு சந்தேகங்கொண்டிருக்கிறார். அதைப் பாடல் மூலமாக எவர் நிவர்த்தி செய்து அவருடைய உண்மைக்கருத்தை வெளியிடுகிறாரோ அவர் மகாராஜாவின் சபாமண்டபத்தில் தொங்கவிட்டிருக்கும் பொற்கிழியைப் பெற்றுக்கொண்டு போகலாம்'' என்று தண்டோராப் போடுவித்தான்; அதாவது பறையறைவித்தான்.

நெடுநாள் ஒருவரும் இச்சந்தேகத்தை நீக்கத்தக்க பாடலைப் பாடி வரவில்லை. கிழியும் கட்டினபடியே தொங்கிக் கொண்டிருந்தது.

இவ்வாறிருக்க, பாண்டியதேசத்தில் மழையின்றிக் கருப்புண்டாயிற்று. பஞ்சம் பன்னிரண்டுவருஷகாலமாக நீங்காமலே யிருந்தது. இந்த வறுமைப்பிணிக்கு ஆற்றாதவராய் அனேகர் அத்தேசத்தைவிட்டு அயல்நாட்டை அடையலாயினர். அப்போது மதுரையில் சொக்கநாதருடைய திருவாலயத்தில் 'தருமி' என்னும் பிராமணோத்தமனொருவன் அர்ச்சகனாயிருந்தான். அவனும் இவ்வறுமைக்குப் பயந்து வேறெங்காவது போக மனங்கொண்டான். ஒருநாள் அவன் சொக்கேசர் சந்நிதானத்தின் முன் நின்று ''எங்களை ஆட்கொண்டருள இங்கு எழுந்தருளிய கருணாநிதியே! இத் திருநகரைப் பஞ்சம் பீடித்துக் கொண்டதால் பலர் இங்கிருந்து வேறிடங்களுக்குப் பெயரலாயினர். உம்மையே நம்பி உமது ஸன்னிதானத்தைக் காத்திருக்கும்

அடியேனுக்கும் பிழைப்பில்லாமற் போய் விட்டது. தேவரீர் கிருபா நோக்கம் வைத்தால் அடியேன் கடைத்தேறி விடுவேன். இவ்வூரரசன் ஏதோ ஒரு சந்தேகங் கொண்டிருக்கிறானும். அதை விளக்குவோருக்குப் பரிசாகப் பொற்கிழி ஒன்றை யளிப்பதாகத் தண்டோரா போட்டிருக்கிறான். எங்குமிருந்து எல்லாருடைய உள்ளத்தையும் அறிய வல்லவரன்றோ தேவரீர்? அந்த அபாரசக்தியுடைய தேவரீருக்குப் பாண்டியன் கருத்து இன்னதென்று தெரியவராதா? தெரியுமாகையால் அதை யொரு பாடலாக்கி அடியேனுக்களித்தால், நான் அரச சமூகஞ்சென்று அத்திருப்பாசுரத்தை அவனுக்குக் காட்டி அவனை மகிழ்வித்துப் பொற்கிழியைப் பெற்றுக்கொண்டு சுகப்படுவேன். அவ்வளவு கிருபை புரியவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்.

தருமியின் வேண்டுகோளுக்கிரங்கிய சிவபெருமான் ஒரு சிறு நறுக்கில்,

''கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே''

என்னுங் கவிதை எழுதிக் கொடுத்து ''அன்பனே, நீ இதைப் பாண்டியனிடங் கொண்டுபோய்க்கொடு. அவன் பரிசளிப்பான்'' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

வாசனை யறியும் வாழ்வை மேற்கொண்ட அழகிய சிறகையுடைய வண்டே! நீ என் பொருட்டு முகஸ்துதியாக ஒன்றும் சொல்லாமல் உன் அனுபவத்தைச் சொல்லவேண்டும். உனது அனுபவமான பழக்கத்தைத் தழுவி நீ யறிந்துள்ள புஷ்பங்களில், பாண்டியன் பட்டமகிஷியின் கூந்தலில் இயற்கையாகப் பொருந்தியுள்ள பரிமளத்தைப்போல் நறுமணத்தை வீசக்கூடிய பூவைக் கண்டதுண்டோ? என்பது கருத்து.

அவ்வாறே தருமி அப்பாடலைப் பெற்றுக்கொண்டு சிவபிரானைப் பணிந்து, வாயாரப் புகழ்ந்து, பாண்டியனிடம் சென்று காட்டினான். அது கண்ட பாண்டியன் அப்பாடலில் தன் கருத்து அடங்கி யிருப்பதுணர்ந்து, பொற்கிழியைக் கொண்டு போக உத்தரவளித்தான்.

தருமி அக்கிழியிடம் சென்றபோது நக்கீரர் பார்த்து "நில்" நீ கொண்டுவந்த பாடல் குற்றமுள்ளது. போ அப்பால்" என்று விலக்கினார். உலகத்தில் உண்மையுணர்ந்த வரையும் அகங்காரம் முற்றும் விட்டொழிவதில்லை. அவ்வகங்காரம் மூவகைப்படும். அவை குலம், கல்வி, தனம் முதலிய வற்றால் வருவனவாம். இவற்றுள் நக்கீரரை மயக்கியது கல்விச்செருக்கு. நக்கீரர் விலக்கியது கண்ட தருமி பிரமித்தவனாய் நின்று, சொக்கேசர் சந்நிதானத்திற்கு மீண்டும் போய் "பெருமானே! என்றுகூவி, கண்களில் நீர் வெள்ளங்கொள்ள, கை கூப்பி நின்று,

"வறுமைநோய் பிணிப்பப் பன்னாள்
வழிபடும் அடியேன் நின்பால்
பெறுபொருள் இழந்தேன் என்று
பேசிலேன்; யார்க்கும் மேலாம்
கறைகெழு மிடற்றோய்! நின்றன்
கவிக்குற்றம், சில்வாழ்நாள், சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால்
ஆருனை மதிக்க வல்லார்?"

என்னும் வருத்தமே இப்போது எனக்குப் பெருத்து விட்டது. "சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தான்" என்கிறபடி இந்தப் பெரும் பழியைத் தேவரீருக்கு அடியேன் தேடிவிட்டேன். என்செய்வேன். மன்னித்தருளவேண்டும். எனக்குப்பொருள் வராமற்போனாலும்

போகட்டும். தேவரீருக்குண்டாகிய பழி எப்படி நீங்குவதென்று ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை" என்று முறையிட்டான்.

இறைவன், தருமியை நோக்கி "நல்லது நீ இராஜ சபைக்குப்போ; நானே வருகிறேன்" என்று அனுப்பி விட்டுப்புலவரைப்போல்வேடம்பூண்டு அங்குச் சென்று, "நமது கவிக்குக் குறை கூறினார் யாவர் ?" என்று வினவினார். நக்கீரன் "நாமே" என்றான். சுவாமி "குற்றம் யாது?" என்று கேட்டார்.

நக்கீரர் "உமது பாடலில் சொற்குற்றமில்லை. பொருட்குற்றமே யிருக்கின்றது." என்றான். "அது யாது ?" என்று இறைவன் கேட்க, "ஸ்திரீகளுடைய கூந்தலுக்கு இயற்கை வாசனையில்லை. செயற்கையால் தான் அது மணம்பெறவேண்டும்" என்றார்.

இறைவன்:—பத்மினிப் பெண்டிருக்கோ ?

நக்கீரர்:—அவர்களுக்குஞ் செயற்கையில் தான் உண்டாக வேண்டும்.

இறைவன்:—தேவதா ஸ்திரீகளுக்கோ ?

நக்கீரர்:—செயற்கை மணமே.

இறைவன்:—நீ வணங்கும் ஞானப்பூங் கோதையாருக்கோ ?

நக்கீரன்:—அத்தேவியாருக்கும் முன் நான் சொன்னபடி செயற்கையாற்றான் மணம்.

இறைவன்:—"நக்கீரரே ! நம்மைப்பாரும் "என்று தமது நெற்றிக் கண்ணைச்சிறிது காட்டினார்.

நக்கீரர்:—" உடல் முற்றும் நீர் கண்ணைக்கொண்டாலும் மொழிந்த நும்பாடல் குற்றம், குற்றமே " என்றார் அஞ்சாநெஞ்சத்துடன்.

இப்படி, தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதித்தவனைப் போல நக்கீரர், முன்வினைவலி யால் மொழிய, இறைவனது நெற்றிக் கண்ணோக்கத்தால் தேகம் வெளுத்து, குஷ்டநோய் அடைந்து எரிச்சல் தாளாதவராய் அருகேயிருந்த பொற்றாமரைத்தடாகத் தில் விழுந்துவிட்டார்.

அருட்பெருங்கடலான சிவபெருமான் "இந்த நக் கீரன் உண்மையில் நம்மையன்றி வேறெத்தெய்வத்தை யும் மறந்துந் தொழாத பரமபக்த சிரோமணி, மானிட மரபிற்றோன்றி மகத்தான சிறப்பைக் கொண்டவரா னாலும், மக்களுக்கு இயல்பாயமைந்துள்ள அகங்காரத் துவம், அத்துணைச் சான்றோரையும் ஏமாற்றத் தனக்கு அனுகூலமான சமயத்தை எதிர்பார்த்திருக்கும் வல் லமை யுள்ளதன்றோ? ஆகையால் ஊழின் திறத்தை வெ ளிப்படுத்திய இவனை நாம் துன்புறுத்துவது நமக்கியல் பா யமைந்துள்ள காருண்ணியத்திற்கு அழகாகாது. இவனைக் காத்தருள வேண்டும்" என்று திருவுளங்கொண் டவராய் மறைந்தருளினார்.

"புலவராகவந்து மறைந்தருளியவர் சிவபெரு மானே" என்பதை நக்கீரரும் ஏனைய விற்பன்னரும் தெரிந்து கொண்டார்கள். நக்கீரர் "அந்தோ! முதற் பெருங் கடவுளான சிவபெருமான் திருவாய்மலர்ந்த திருப்பாசுரத்தின் மீதுங் குற்றஞ் சாட்டத் துணிந்தோ மோ! எம்பெருமானே! சிற்றறிவினனாகிய அடியேன் தெரியாமற்செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண் டும்" என்று தோத்திரம் புரிந்தார்.

இறைவன் அவரைப்பரிவுடன் நோக்கி "நக்கீரரே! நீர் தேடிக்கொண்ட இந்நோய் தீருவதற்கு உடனே

கைலாயஞ் சென்று அம்மகா பருவதத்தைத் தரிசிப் பீராக" என்று உத்தரவளித்தார். அங்ஙனமே நக்கீரர் வடதிசையை நோக்கிப் புறப்பட்டார்.

தரித்திரத்தால் வருந்திய தருமியென்னும் அந்த ணன் மேற்சொன்ன பொற்கிழியை ஆனந்தத்துடன் பெற்றுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து சுகப்பட்டான். பின்கொஞ்சகாலத்திற்குள்மழைபெய்யமதுரைமா நகரம் முன்போல் செழிப்புற்றது. பாண்டிய தேசத்தை விட் டகன்றவரும் மீண்டுமத்தேசத்தை யடைந்தனர்.

கைலையை நோக்கிப்போன நக்கீரர் மார்க்கத்தி லுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றையுந் தரிசித்துக்கொண் டே போனார். அப்போது வழியில் ஓரடர்ந்த கானகத் தில் நல்ல தடாகமொன்றைக் கண்டார்; நடையின் சிரமந் தீரும்பொருட்டு அத்தடாக தீரத்தில் அயர்ந்து நின்றார். அப்போது ஆங்கிருந்த ஆலமரத்தினின்றும் பழுப்புற்ற இலையொன்று ஜலத்தில் விழுந்தது. அப்படி விழுந்தஇலை யின் பாதிபாகம் ஜலத்திலும் பாதி கரையிலும் இருந் தது. கரையிலிருந்த பாகம் கொக்காகவும் நீரிலிருந்தது மச்சமாகவும் உருக்கொண்டு ஒன்றையொன்று இழுக்கத் தொடங்கிய அதிசயத்தை நக்கீரர் வியந்து பார்த்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் தற்செயலாய் ஒரு பெரும் பூதம் தோன்றிற்று. உடனே அது நக்கீரரை எடுத்துக் கொண்டுபோய் மலைக்குகை யொன்றில் அடைத்து விட்டது.

இப்பூதம் அக்குகையில் முன்னதாகவே தொளா யிரத்துத் தொண்ணூற்றென்பது நரமனிதரை அடைத்து வைத்திருந்தது. அடைபட்டிருந்தவர்கள் புத்தம் புதியராய்வந்த நக்கீரரைப்பார்த்து " நாங்கள்

இந்த இடத்தில் உயிரோடாவது இருப்போம். உம்மால் இப்போது பூதத்துக்கு இரையாக நேர்ந்தது. பூதம் ஆயிரம்பேர் சேர்ந்ததும் அவ்வளவு பேரையும் புசிப்பது வழக்கம். உன்னோடு ஆயிரம் சரியாய் விட்டபடியால், பூதம் நம்மெல்லோரையும் புசிப்பதற்காக, நீராடப் போயிருக்கிறது" என்று சொன்னார்கள்.

நக்கீரர் கேட்டு "நம்மால் இவ்வளவு பேரும் பூதத்திற்கு ஆகாரமாக வேண்டியதா யிருக்கிறதே. இந்தப் பாதகத்திற்கு நாமல்லவோ காரணமாகிறோம். நல்லது" என்றெண்ணி ஸ்ரீ முருகப்பெருமானைப் பிரார்த்தித்து "இந்த ஆபத்தை நீக்கவேண்டும் என்று திருமுருகாற்றுப்படை" என்னும் பிரபந்தம் ஒன்றைப்பாடி அத்தேவனைத் துதிசெய்தார்.

குமாரக்கடவுள் அவருடைய பிரார்த்தனைக் கிரங்கிப் பூதத்தைக் கொன்று நக்கீரரையும் ஏனையவரையும் பாதுகாத்தருளினார். அப்பால் நக்கீரர் சுப்பிரமணிய மூர்த்தியை நோக்கி "சுவாமி! சிவபெருமானுடைய கட்டளைப்படி அடியேன் கயிலையங்கிரியைத் தரிசிக்க வேண்டும். அது அடியேனால் சாத்தியமாகத் தக்கதாயில்லை. நீர் கிருபை செய்தாலன்றி அக்காரியம் நிறைவேறாது. கடைக்கண் வைத்தருளவேண்டும்" என்று வேண்டினார்.

அவ்வேண்டுகோளுக்கிசைந்து அறுமுகப் பெருமான் அவரை யன்புடன் கடாக்ஷித்து, "அன்ப! கயிலையென்று பொதுப்படக் கட்டளையிட்டதால், நீ தென் கயிலையாகிய ஸ்ரீகாளத்திக்கேகினால் உன் நோய் குணப்படும். இத்தடாகத்தில் முழுகு. முழுகியவுடன்

காளத்திக்கணுள்ள பொன்முகரி என்னும் புண்ணிய தீர்த்தத்தில் எழுந்திருப்பாய். உனக்கு அப்போது தெங்கயிலை புலப்படும். நோயும் நீங்கும்'' என்று சொல்லிச் சமீபத்திலிருந்த தடாகத்தைக் குறிப்பித்தார்.

நக்கீரர் அதில் முருகவேள் ஆக்ஞைப்படி முழுகி, பொன்முகிரி தீர்த்தத்தில் எழுந்து தமது தேகத்தை உற்றுப் பார்த்தார். நோய் மாயமாய்ப் பறந்துபோயிற்று. பத்தரை மாற்றுத் தங்கம்போல் சரீரம் பளபளப்பாய் ஜொலித்தது. இது ஸ்ரீ காளத்தியப்பரின் திருவருளென்று மதித்து அக்கடவுளின் ஆலயத்திற் பிரவேசித்து,

''அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினாலுருகி விழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
ஆசைக்கடற்குண் மூழ்கிச்
சங்கரா! சுயம்புவே! சம்புவே! எனவுமொழி
தழுதழுத்திட வணங்கும்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னென்னையுந்
தண்ணருள் புரிந்தாள்வையோ!
துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியை யொரு சொல்லாலுணர்த்தியே
சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லாலடிக்குள் வளர்
சித்தாந்த முத்திமுதலே..................
....

என்று வாயாரப்புகழ்ந்து போற்றி, அடியேன் உமது ஸந்நிதானத்தை நாடி வந்தேன். என்னை யாதரித்தருள வேண்டும்'' என்று அடியற்ற மரம்போல் தரையில் விழுந்து பணிந்து, கயிலாச நாதரும், காளத்தியப்பரும்

ஒருவரே யெனத்தெளிந்து, "கயிலை பாதி காளத்தி பாதி", என்னும் பிரபந்தத்தைப் பாடினர். பிறகு மதுரையம்பதிக்குத் திரும்பி பழையபடி சங்கப்புலவர்களுக்கு நாயகராயமர்ந்து இன்புற்றார்.

இவர், திருமுருகாற்றுப்படை, கயிலைபாதி காளத்தி பாதி யந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, கண்ணப்பர் திருமறம், பெருந்தேவபாணி முதலான நூல்களைச்செய்தனர். இவையேயுமன்றி இறையனாரகப் பொருளுக்குப் பேருரையொன்றும் அழகாய் இயற்றியருளினர். திருமுருகாற்றுப்படை வித்வ சிரோமணிகள் யாவராலும் போற்றப்படுவதொன்று. குமாரக்கடவுளின் பேரருளைப்பெற்று சகல பாக்கியங்களையும் எளிதில் அடைய விரும்புவோர்க்கு இத்திருமுருகாற்றுப்படை சிறந்த கருவியாம்.

நக்கீரரது புண்ணிய சரித்திரத்தைப் பிரதிநாளும் படிப்பவரும், புதிது புதிதாகச் செவ்விய நடையில் எழுதுபவரும் செவிகொடுப்பவரும் மேன்மையடைவர். இது சத்தியம் சத்தியம்.

ஏர் நடந்தால் பேர் நடக்கும் என்று ஒரு பழமொழியுண்டு. அதாவது ஒருவனுக்குக் கொஞ்சநிலமாவதிருந்து அதில் சாகுபடி செய்துவந்தால் நல்ல பேர் உண்டாகும் என்பது கருத்து. அதனாலேதான் ஔவை "பூமி திருத்தியுண்" என்றார். பாலராக்கமணி மாலையிலும் 'பயிர்த்தொழில் பயின்று கொள்' என்னும் போதனை பிறந்துள்ளது. அநேகர் தற்காலப் படிப்பிலும் உத்தியோகத்திலும் மயங்கித் தங்களிக்கிருக்கும் நிலங்களைக் கவனிக்காமல் விட்டு விடுகின்றனர். இந்த வழக்கம் நீங்கினாலன்றி நமது தேசம் க்ஷேமமடையாது. "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்னும் நல்ல போதனையை ஞாபகத்திலே கொண்டவர்கள் சேவகத் தொழிலைப் பெரிதாய் எண்ணிப் பயிர்த்தொழில்களை மறப்பார்களா?

உத்தம வீரர்.

வ. வே. சு. ஐயர்

(கே. எஸ். மணியன் எழுதியது).

பிறப்பு.

உத்தமவீரரும், பாரதமாதாவின் அருமைப் புதல்வர்களில் ஒருவருமான ஸ்ரீமான் வ. வே. சுப்பிரமணிய ஐயர் திருச்சிராப்பள்ளிக் கடுத்த வரகனேரி என்ற கிராமத்தில் ஒரு சிறந்த குடும்பத்தில் பிறந்தவர். இவர் தமது ஆயுட்காலம் முழுவதையும் பாரத நாட்டின் தொண்டிற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்குமே அர்ப்பணம் செய்தவர். தமிழ் நாட்டினர் தேசபக்தியையும், தேசசேவையையும் அறியாமலிருந்த நாட்களில் தேசத்திற்காகத் தமது உயிரையும் கொடுக்கச் சித்தமாய் முன்வந்த வீரர்களில் ஸ்ரீமான் ஐயரும் ஒருவராவர். 1907 1908-ம் ஆண்டுகளில் இந்தியாவில் நடைபெற்ற சுதேச இயக்கத்தில் முன் அணியில் நின்று ஸ்ரீமான் ஐயர் செய்த தொண்டு என்றும் மறக்கற்பாலதன்று. அவர் செய்த தொண்டு அவருக்கு அழியாப் புகழை அளித்ததுமன்றித் தமிழ் நாட்டிற்கும் சிறந்த கௌரவத்தை அளித்தது என்றே சொல்லலாம்.

படிப்பு.

ஸ்ரீமான் ஐயர் முதலில் வக்கீல் பரீட்சையில் சிறப்புடன் தேறித் திருச்சிராப்பள்ளியிலேயே சிலகாலம் வக்கீல் தொழில் செய்து வந்தார். பின்பு ரங்கூனுக்குச் சென்று அங்கே வக்கீல் தொழில் நடத்தி வந்தார். ரங்கூ

னில் ஸ்ரீமான்ஐயர் வக்கீல் வேலைசெய்து வந்தகாலத்தில் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் வேலைக்குப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உதித்தது பின்பு அவர் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிப்பதற்காக; தமது நாட்டைவிட்டு இங்கிலாந்து தேசம் சென்றார். இங்கிலாந்துக்குச் சென்றதும் சிலகாலம் அவர் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்து வந்தார். பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்த நாட்கள்தான் அவருடைய நாட்களில் சிறந்தவையாகும்.

இங்கிலாந்தில் அவரது வாழ்க்கை.

இங்கிலாந்தில் பின்பு அவர் அடிமைப்பட்டு வருந்தும் தமது தாய்த்திருநாட்டின் விடுதலைப் போரில் தீவிரமாகக் கலந்து கொண்டார். தேசத்திற்கெனத் தங்களுக்குள்ள எல்லாவற்றையும் தியாகம்செய்த சாவர்க்கார் முதலிய தேசபக்தவீரர்கள் அவரது ஆருயிர்த்தோழர்களாயினர். அவ்வீரர்களுடன்கூடி ஸ்ரீமான் ஐயர் இந்திய நாட்டின் விடுதலைக்காகச் செய்த முயற்சிகள் அளவிடக் கூடியனவல்ல. இந்திய நாட்டின் உண்மையான சரித்திரம் எழுதப்படும் காலத்தில் ஸ்ரீமான் ஐயர் அவர்கள் இங்கிலாந்தில் செய்த தொண்டு அதில் பொன்னே போன்ற எழுத்துக்களால் வரையப்படுமென்பதில் ஐயமில்லை.

இங்கிலாந்தில் "இந்தியா மாளிகை" என்ற இந்திய வாலிபச்சங்கத்தை ஸ்தாபித்தவருள் ஸ்ரீமான் ஐயரும் ஒருவர். 1907-ம் வருஷத்தில் கர்ஸன்வைலி என்ற ஆங்கில உத்தியோகஸ்தர் ஸ்ரீமான் மதன்லால் திங்கரா என்பவரால் சுடப்பட்டபின்பு இந்திய வாலிபச்சங்கமான "இந்தியா மாளிகை" கலைந்து விட்டது. ஆங்கில

இரகசியப் போலீசார் அந்தக் கொலையின் சம்பந்தமாக அந்த "இந்தியா மாளிகை"யில் வசித்துவந்த இந்தியர்களின்மீது தங்களது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தனர். இந்தியச் சங்கத்திற்கு ஸ்ரீமான் ஐயரும் சாவர்க்காரும் முக்கியஸ்தர்கள் என்பதை இரகசியப் போலீசார் அறிந்து கொண்டார்கள்.

பின்பு ஸ்ரீமான் ஐயர் தாம் படித்துவந்த பாரிஸ்டர் பரீட்சையில் தேறினர். ஆனல் அவர் தமக்கு அந்தப் பட்டம் வேண்டாமென்று நிராகரித்துவிட்டார். அதனல்தான் அவர்பாரிஸ்டர் பட்டம் பெறவில்லை.

ஸ்ரீமான் ஐயரைக் கைதுசெய்ய முயற்சி.

இங்கிலாந்தில் கர்ஸன் வைலி கொல்லப்பட்ட பொழுது இந்தியாவில் நடந்த ராஜியக் கொலைகளுக்கு உதவி யளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஸ்ரீமான் சாவர்க்கார் இங்கிலாந்திலேயே கைது செய்யப்பட்டார். அவரை அரசாங்கத்தார் விசாரணையின்பொருட்டு இந்தியாவுக்குக் கப்பலில் கொண்டுவரும்பொழுது ஸ்ரீமான் சாவர்க்கார் நடுவழியில் சமுத்திரத்தில் குதித்து நீந்திப் பிரஞ்சுதேசத்தை அடைந்ததும், பிரஞ்சு போலீஸார் அவரைப் பிடித்து ஆங்கிலேயரிடத்தில் ஒப்புவித்ததும், அந்த விஷயத்தில் ஹேக்மன்றத்தினர் வழங்கிய அநீதியும் விரிக்கிற்பெருகும்.

ஸ்ரீமான் சாவர்க்கார் பிடிக்கப்பட்டு இங்கிலாந்தில் சிறையிலிருந்த காலத்திலேதான் ஸ்ரீமான் ஐயர் பாரிஸ்டர் பரீட்சையில் தேறிப் பட்டம்பெற மறுத்துவிட்டார். ஒருநாள் சாவர்க்காரைப் பார்ப்பதற்காக ஸ்ரீமான் ஐயர் அவர்இருந்த சிறைச்சாலைக்குச் சென்றார்.

அப்பொழுது ஸ்ரீமான் சாவர்க்கார் ஐயரைப்பார்த்து "நீ என்ன இன்னமும் இத்தேசத்திலா இருக்கின்றாய்?" என வினவினார். ஸ்ரீமான் ஐயரையும் சாவர்க்காருடன் சம்பந்தப்படுத்திக் கைது செய்ய முன்பே அரசாங் கத்தார் வாரண்டு பிறப்பித்திருந்தனர். இந்த விஷ யம் ஸ்ரீமான் ஐயருக்குத் தெரியாது. ஸ்ரீமான் சாவர்க் கார் அதை ஐயருக்கு அறிவித்தார். அதற்கு ஐயர் "உன்னுடன் நான் சிறையிலிருந்தாலென்ன?" என்றார். "சிறைக்குள் வந்து நீ யாது செய்யப்போகின்றாய்? மடையன் போலிராதே" என்று சாவர்க்கார் பதிலளித்து 24-மணி நேரத்திற்குள் இங்கிலாந்தின் எல்லையைக் கடந்துசெல்லும்படி ஸ்ரீமான் ஐயரை வற்புறுத்தினார்.

ஸ்ரீமான் ஐயரது அஞ்ஞாதவாசம்.

ஸ்ரீமான் ஐயர் உடனே தமது இருப்பிடத்திற்கு வந்து தமக்குப் பிரயாணத்திற்கு வேண்டிய சில உடை களை மட்டும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அவர் வசித்து வந்த ஹோட்டலின் சொந்தக்காரி சீக்கிரத்தில் அவருக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் விருப்புடன் செய்து கொடுத்தாள். முதலில் ஸ்ரீமான் ஐயர் கலை மார்க்கமாய் பாரிஸ் நகருக்குச் செல்லுவதற்கு யோசித்திருந்தார். ஆனால் அவருக்கு புகைவண்டி தப்பிவிட்டது. பின்பு அவர் கப்பல் மார்க்கமாய் உலாந் தாதேசத்தின் தலை நகராகிய ஆம்ஸ்டர்டாம் நகரத் திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஸ்ரீமான் ஐயர் பாரீ ஸுக்குப் புறப்பட்டுச் செல்லப் போகின்றாரென்பதை அறிந்த இரகசியப் போலீசார் அவரை அடையாளம் கண்டுபிடித்துக் கைது செய்ய லண்டன் நகரிலிருந்து செல்லும் மார்க்கத்தில் காத்திருந்தனர். அந்த வழி

யாக ஐயர் வராததினுல் எல்லா இடங்களுக்கும் ஸ்ரீமான் ஐயரைக் கண்டுபிடிக்கத் தந்திகள் பறந்தன. ஸ்ரீமான் ஐயர் ஏறிச்சென்ற கப்பலின் அதிகாரிக்கும் "வ. வே. சு. ஐயர் என்ற தென் இந்திய பிராமணனைக் கண்டால் பிடிக்கவும்" என ஓர் உத்தரவு வந்தது. ஆனுல் அந்தக் கப்பலின் அதிகாரிக்கு ஐயரின் அடையாளத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தென் இந்தியப் பிராமணர்கள் தலையின் பின்புறத்தில் முடியுள்ளவர்கள். ஸ்ரீமான் ஐயர் பஞ்சாபிலுள்ள அகாலியரைப் போல் தாடி வளர்த்து அவர்களைப்போல் உடை அணிந்திருந்தார். இவர்தான் தாங்கள் தேடும் மனிதராக இருக்கக் கூடுமோவென ஒரு போலீஸ்காரன் ஒரு தந்தியைக் கொண்டு வந்து "மிஸ்டர். வ. வே. சு. ஐயர் இதோ உமக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது" என்ருன். ஆனுல் ஸ்ரீமான். வ. வே,சு. ஐயர் அதைக்கேட்டு மயங்கவில்லை; அந்தத்தந்தியை வாங்கிப் பார்க்கவேண்டுமென்றும் யத்தனித்தாரில்லை. ஸ்ரீமான் ஐயர் தைரியத்துடன் "இந்தத்தந்தி வ. வே. சு. ஐயருக்கு அல்லவா வந்துள்ளது? எனது பெயரோ விக்ரமசிங்! இப்படியிருக்க இத்தந்தியை ஏன் கொண்டுவந்தீர்கள்?" என்ருர். வந்த போலீஸ்காரன் அதற்காக அவரிடத்தில் மன்னிப்புக்கேட்டுக் கொண்டுசென்ருன். வ. வே.சு. ஐயரைப்பிடிக்கக் கப்பல் அதிகாரிகள் செய்த முயற்சிகள் ஒன்றும் பலிக்கவில்லை.

அவரது மாறுவேட யாத்திரை

ஆம்ஸ்டர் டாம் நகரத்திலிருந்து நேராக ஸ்ரீமான் ஐயர் பாரீஸ் நகருக்குச் சென்ருர். அவர் தமது கச்சையில் சுமார் 60 பவுன்களுக்குமேல் ஒளித்து வைத்திருந்தார் எனினும் ஓர் ஏழையைப்போலவே சுமார் நான்கு

மாதகாலம் பாரீஸ் நகரத்தில் வசித்துவந்தார். பாரீஸ் நகரில் இந்தியாவிடத்திலும், இந்திய தேச பக்தர்களிடத்திலும் மிகுந்த அன்புசெலுத்திவந்த ஸ்ரீமதி, காமா என்ற அம்மையாரின் நட்பு சிறிது காலத்திற்குள் ஸ்ரீமான் ஐயருக்குக் கிடைத்தது. நாளுக்குநாள் அவர்களது நட்பு அதிகமாகிக்கொண்டே வந்தது. பிறகு ஐயர் சிலகாலம் பாரீஸ் நகரிலிருந்து பின்னர் ரோமாபுரி, ஜெர்மனி முதலிய இடங்களுக்குச் சென்று துருக்கி தேசத்தின் தலைநகரான கான்ஸ்தாந்தி நோபிள் வந்தார். அங்கிருந்து அவர் ஒரு பக்கிரி வேடந்தாங்கி இந்தியாவுக்குச் செல்லும் கப்பலில் ஏறி ஜபமாலையுடன் "அல்லாஹோ அக்பர்" என்று அடிக்கடி கூறிக்கொண்டு முகம்மதியர்களைப்போல் கப்பலில் ஒவ்வொருநாளும் ஆறுதடவை கடவுளைத் தொழுதுகொண்டு எகிப்து தேசத்தின் துறைமுகப் பட்டினமான கெய்ரோ நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே அவர் ஒரு துருக்கியப் பெயரை "விஸிடிங் கார்டுகளில்" (காணும் சீட்டு) அச்சடித்துக்கொண்டு வழியில் தம்மைப்பற்றிக் கேட்பவர்க்கெல்லாம் அந்தச் சீட்டில் ஒன்றைக் கொடுத்துத் தாம் கல்கத்தாவில் ஒரு பெரிய வியாபாரி என்று சொல்லிக்கொண்டு இலங்கைத்தீவின் பிரபல துறைமுகப் பட்டினமான கொழும்பு வந்து சேர்ந்தார்.

கொழும்பு போலீசார் கப்பலில் இறங்கிய துருக்கியப் பக்கிரி வ. வே. சு. ஐயராக இருக்கலாமோ எனச் சந்தேகித்தார்களே யன்றி மாறுவேடம் தாங்கியுள்ள ஸ்ரீமான் ஐயரைக் கைதுசெய்யத் துணிந்தாரில்லை. பின்பு ஐயர் அங்கிருந்து புறப்பட்டு நேராக இந்திய பிரஞ்சு நாடுகளின் தலைநகராக விளங்கும் புதுச்சேரி

வந்து சேர்ந்தார். அங்கு வங்காள மகரிஷி அரவிந்தர் தங்கியிருந்த வீட்டில் ஸ்ரீமான் ஐயர் இறங்கி, தம்மை இன்னாரென்று தெரியப்படுத்தினார்.

புதுச்சேரியில் ஐயரது வாழ்க்கை.

தேசத்தியாகிகளின் வாசத்தின் பயனாக புனித மடைந்துள்ள புதுச்சேரிக்கு வந்தும் ஸ்ரீமான் ஐயருக்குக் கஷ்டங்கள் தீர்ந்தபாடில்லை. புதுச்சேரியி லிருந்து அவரைக் கிளப்பி பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள சிறைக்கூடத்தில் அடைத்துவிடவேண்டுமென்று போலிசார் பகீரதப் பிரயத்தினம் செய்தனர். சுமார் ஏழு ஆண்டுகள் வரையில் ஸ்ரீமான் ஐயர் புதுவை, நகரில் தனி வாசம்செய்தார். பிரஞ்சு தேர்தல் சமயத்தில் போலீசார் சில போக்கிரிகளை ஏவி இரவில் அவரைத் தூக்கிக்கொண்டு வரும்படி முயன்றதாகவும் சொல்லப் படுகிறது. அப்பொழுது ஐயரது மனைவியார் பாக்கிய லட்சுமி அம்மாள் சமீபத்தில அருவியில் விழுந்து இறந்த சுபத்திரை என்ற கைக்குழந்தையுடன் பட்ட கஷ்டங்கள் அளவிடற் பாலனவல்ல. இவ்வளவு கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு ஸ்ரீமான் ஐயர் தமது வாழ்க்கையை நடத்திவந்தார். இடையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவரைக் கைதுசெய்வதற்காகச் செய்த முயற்சிகள் எண்ணில. ஸ்ரீமான் ஐயர் கர்ஸன்வைலி கொலையில் சம்பந்தப்பட்டவரென்றும் அவரைத் தங்களிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றும் பிரஞ்சு அரசாங்கத்தாரை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் கேட்டுப் பார்த்தனர். ஆனால் பிரஞ்சு அரசாங்கத்தார் அந்தக் கொலை ராஜீய சம்பந்தமுள்ளதென்றும், அவரை ஒப்புவிக்க முடியாதென்றும் கூறி மறுத்துவிட்டார்கள்.

புதுச்சேரியில் ஸ்ரீமான் ஐயருக்கு பணக்கஷ்டம் அதிகமாக இருந்தது. அவரது நண்பர்கள் அனுப்பிய பணம் அவருக்கு ஒழுங்காகச் சேருவதேயில்லை. ஆனால் ஐயர் இக்கஷ்டங்களுக்கிடையில் தமது வாழ்க்கையைச் சிக்கனத்துடன் நடத்தி வந்தார்.

மீண்டும் அவரைப் பிடிக்க முயற்சி.

பிறகு ஜெர்மன் யுத்தம் ஆரம்பமாயிற்று. அப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தார், ஸ்ரீமான் ஐயர் முதலியவர்கள் ஜெர்மனியாருடன் கம்பியில்லாத் தந்தியின் மூலமாகப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருக்கிறார்களென்றும், எனவே அவர்களைப் புதுச்சேரியிலிருந்து அப்புறப்படுத்தி விடவேண்டுமென்றும் பிரஞ்சு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர். ஆனால் பிரஞ்சு அரசாங்கத்தார் அதற்கு இணங்கினார்களில்லை.

இலக்கிய ஆராய்ச்சி.

ஸ்ரீமான் ஐயர் புதுவையில் தனி வாசஞ்செய்த காலத்தில் தமிழ்நாட்டாரின் முன்னேற்றத்தைக் கருதி பத்திரிகைகளில் அடிக்கடி வியாசங்கள் எழுதி வந்ததுமன்றி, தமிழ்ஆராய்ச்சி செய்வதிலும் தமதுகாலத்தைச் செலவிட்டு வந்தார். தமிழ் மறையான திருக்குறளை ஸ்ரீமான் ஐயர் ஆறுவார காலத்திற்குள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார். அந்த மொழிபெயர்ப்பைப் போற்றாதவர் ஒருவருமில்லை. அந்த மொழிபெயர்ப்பைத் திருத்திச் சமீபத்தில் ஸ்ரீமான்ஐயர் அதன் இரண்டாம் பதிப்பையும் வெளியிட்டிருக்கின்றார். தமிழ் மொழி மீது ஐயருக்கு இருந்த பற்று அளவிடற்பாலதல்ல. தமிழ்பாஷையில் அவர்பல பெரிய ஆராய்ச்சிகளை செய்தார். அதில் அவரது கம்பராமாயண ஆராய்ச்சியும்

ஒன்று. புதுச்சேரியில் "கம்பநிலையம்" என்ற பிரசுர சாலை ஒன்றை ஸ்தாபித்து, அதன் மூலம் கம்பராமாயணம் பாலகாண்டப் பதிப்பொன்றை புதிய முறையில் வெளியிட்டார். பின்னர் சுவையுள்ள சிறு கதைகளையும், சரித்திரங்களையும், அவர் எழுதினார். ஆங்கிலக் கதைகளில் பலவற்றை ஸ்ரீமான் ஐயர் அவற்றின் சுவை குன்றாமல் மொழிபெயர்த்திருக்கின்றார். தமிழ், ஆங்கிலம் முதலிய பாஷைகளைப்போல் அவருக்கு பிரஞ்சு, கிரீக், லாட்டின் முதலிய மேல்நாட்டுப பாஷைகளிலும் பாண்டித்தியம் உண்டு.

"தேசபக்தன்" ஆசிரியர்.

கடைசியாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவர்மீது யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப் போவதில்லையென்பதை அவர் அறிந்து, சென்னை நகரில் நடந்துவந்த "தேசபக்தன்" பத்திரிக்கைக்கு ஆசிரியராகவந்து அமர்ந்தார்; "தேசபக்தன்" பத்திரிகையில் வேலைபார்த்து வரும்பொழுதே ஸ்ரீமான் ஐயருக்குத் தமிழ்நாட்டில் ஒரு குருகுலம் ஸ்தாபித்து, அதில் இளைஞர்களுக்குத் தகுந்த கல்விபோதிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டு. "தேசபக்தன்" பத்திரிகையில் ஆசிரியராயிருந்து அவர்சிலமாதங்கள் தமிழ்நாட்டிற்குத் தாம் விரும்பிய தொண்டியற்றி வந்தார். இடையில் அரசாங்கத்தார் 1921ஆ "தேசபக்தன்" பத்திரிகையின்மீது ராஜத்துவேஷ வழக்குத் தொடுத்தனர். அந்த வழக்கில் ஸ்ரீமான் ஐயர் ஒன்பது மாதகாலம் அரசாங்கத்தாரால் தண்டிக்கப்பட்டு பல்லாரி சிறைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். பல்லாரி சிறைச்சாலையில் தான், ஸ்ரீமான்

ஐயர் ஆங்கிலபாஷையில் தம்முடைய கம்பராமாயண ஆராய்ச்சியை எழுதினார். அதை அவர் இன்னும் முடித்தாரில்லை.

குருகுலம்.

சிறையிலிருந்து விடுதலை அடைந்தபிறகு ஸ்ரீமான் ஐயர் தமிழ்நாட்டில் ஒரு குருகுலம் ஏற்படுத்தும் விஷயத்தில் மிகுந்த கருத்துள்ளவராக இருந்தார். பல நண்பர்களைக் கண்டு அவர்களுடைய பொருளுதவி பெற்று முடிவில், தாம்பிரபரணி நதி தீர்த்தத்திலுள்ள கல்லிடைக் குறிச்சியில் முதலில் ஆசிரமத்தை ஏற்படுத்தினார். பின்பு குருகுலத்திற்கு அதிகமான பொருள் சேர்ந்தது. ஸ்ரீமான் ஐயர் சேரமாதேவியில் குருகுலத்திற்காக நிலம் வாங்கி அங்கே கட்டிடங்களும் கட்டினார். குருகுலத்திற்குப் பலஇடங்களிலிருந்துபல இளைஞர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களுக்குத் தகுந்த கல்வியை ஸ்ரீமான் ஐயர் போதித்துவந்தார்.

"பாலபாரதி"

குருகுலத்திற்காக ஸ்ரீமான் ஐயர் ஓர் அச்சுக்கூடத்தையும் ஏற்படுத்தி அதில் "பால பாரதி" என்ற சிறந்த மாதச் சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். அதில் சிறந்த கட்டுரைகளும், கதைகளும், ஆராய்ச்சிகளும் பொலிந்து கிடக்கின்றன. கம்பராமாயணத்தைப் பற்றி எழுதிய கட்டுரைகளை அவர் அந்தச் சஞ்சிகையில் அடிக்கடி வெளியிட்டு வந்தார். இடையில் குருகுலப் போராட்டம் ஆரம்பமாயிற்று. அவர் இருக்கும் வரையில் அந்தப்போர் முடியவேயில்லை.

ஸ்ரீமான் ஐயர் பலபாஷைகளிலும் பாண்டித்தியமுள்ளவர்; கல்வியில் கரைகண்டவர். தமிழ்நாட்டு

இளைஞர்களைப் பழக்கி வீரர்களாக்க வேண்டுமென்றும், தமிழர்களுக்கு அரிய ஞானத்தையும், சிறந்த அறிவையும் புகட்ட வேண்டுமென்றும் அவர் குருகுலத்தை ஸ்தாபித்தார்; "பால பாரதி"யை நடத்தி வந்தார். ஆனால் அவரது தொண்டிற்கு நம் தமிழ்நாடு பாத்திரமாகவில்லை. இஃது தமிழர்களின் துர் அதிர்ஷ்டமேயாகும்.

மரணம்.

1925-வருஷம் ஜூன் மாதம் 3-ந்தேதி அவர் தமது செல்வக்குமாரியான சுபத்திரையுடனும், ஆசிரம மாணக்கர் சிலருடனும் திருக்குற்றாலத்திற் கடுத்த பாப நாசம் நீர் வீழ்ச்சியைக் கண்டுகளிக்கச் சென்றார். கலியாண தீர்த்தம் வீழ்ச்சிக்கருகிலுள்ள குன்றுகளில் அவரது புத்திரி நடந்துகொண் டிருக்கையில் கால் தவறி வீழ்ச்சியில் வீழ்ந்துவிட்டாள் அவளைத் தப்புவிப்பதற்காக ஸ்ரீமான் ஐயரும் நீர் வீழ்ச்சியில் குதித்தார். இருவரும் மூழ்கி இறைவன் திருவடி சேர்ந்தனர்.

அவரது பெருமை

அறிஞர் வ. வே. சு. ஐயர் தமிழ்த் தாய் ஈன்ற பெருந் தமிழ் வீரர்களில் ஒருவர். தற்காலத்தில் நமது தேசத்திலுள்ள தேசபக்தர்களில் சிலர் பேசுவதில் வீரர். சிலர் எழுதுவதில் வீரர். ஆனால் ஐயர் அப்படிப் பட்டவரல்லர். சுயநலங்கருதி தேசசேவை செய்யும் தான் தோன்றிகளைப்போலும் அல்லர். செய்கையில் வீரராய் விளங்கினார். தமிழர்களுக்கு வீரத்தையும் அறிவையும், ஊட்டவேண்டுமென அவர் செய்த முயற்சி அளவிடக்கூடியதல்ல. தமிழ் நாட்டார் அவரது தொண்டை என்றும் மறக்க முடியாது. அவர் செய்து

முடிக்காமல் விட்டுப்போன குருகுலத்தை நன்கு நடத்துவதற்கு முயற்சி செய்வதே தமிழரின் இன்றியமையாக் கடமையாகும். அவரது வாழ்க்கையில் எங்கும் வீரம் ததும்புகின்றது. அவர் இருக்கும் பொழுதும் வீரத்துடனிருந்தார். இறக்கும்பொழுதும் வீரத்துடன் இறந்தார். தமிழர்கள் எல்லோரும் அவரால் குழந்தையைப்போல் வளர்க்கப்பட்ட குருகுலத்தை வளர்த்து, தமிழை அபிவிருத்தி செய்து அவரது ஞாபகத்தை நிலை நாட்டுவது அவசியமாம். அவரது பிரிவினால் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கும் அவரது மனைவியையும் குழந்தையையும் ஆதரிக்க வேண்டுவதும் தமிழ்நாட்டவரின் பெருங்கடமையாம். வீரர் வ. வே. சு. ஐயரின் திருநாமம் வாழ்க.

(வந்தே மாதரம்.)

சுபம்

ஸ்ரீமதி ராமாபாய் ரானடே.

மாதர்களுக்கு அவர் செய்த ஊழியம்.

(கே. எஸ். மணியன் எழுதியது.)

மாதர்கள் முன்னேற்றமடையாத நாடு சிறப்புடையதன்று எனப் பல பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். நமது நாடு இப்பொழுது மிகவும் கேவலமான நிலைமையிலிருப்பதற்குக் காரணம் நம் நாட்டு மாதர்கள் பிற்போக்கான நிலையில் இருப்பதே யாகும். சென்ற சில வருஷங்களாக நமது தேசத்திலும் பெண் மணிகள் கல்வியறிவுடன் முன்னேறி வருகின்றனர். தமிழில் "தாயைப் பார்த்து மகளைக்கொள்" என ஒரு பழமொழி

யுண்டு. தாய்மார்கள் கல்வி அறிவு அற்றவர்களாய் இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அப்படித்தான் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே இப்படிப்பட்ட பிற்போக்கான நிலைமைக்கு பெற்றோர்களே காரணம். சிறுவயதில் பெண்மணிகள் பெற்றோர்களால் நன்கு பழக்கப்பட்டால் இப்படிப்பட்ட குறைகள் நிகழா. எனவே பெண்மணிகளின் முன்னேற்றத்தில் பெற்றோர்களும், புருஷர்களும் தங்களது கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம். நமது நாட்டிலுள்ளவர்களில் பெரும்பாலோர் அறியாமை என்ற பழிக்கு ஆளாகின்றனர். அவர்களது அறியாமையின் பயனாக பெண்மணிகளில் பெரும்பாலோர் பலவித கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட அறியாமை நம் நாட்டிலிருந்து நீக்கப்பட்டாலன்றி நாம் முன்னேற்ற மடைய வழியில்லை.

நமது பண்டைச் சரித்திரங்களைப் பார்த்தால் அதில் நமது பெண்மணிகளின் பெருமை நன்கு புலனாகும். சாவித்திரி, தமயந்தி, நளாயினி, சந்திரமதி, சீதை, திரௌபதி போன்ற பல உத்தமிகள் வாழ்ந்த இந்நாடு இப்படியிருப்பதற்குக் காரணம் யாது? நமது அறியாமையே யாகும். "மாதர்கள் சந்தோஷத்துடன் வசிக்காத நாடு சீக்கிரத்தில் அழிந்துபோம்" என்று ரிக் வேதத்தில் கூறப்பட் டிருக்கிறது. நம் நாட்டில் தோன்றிய வீரத்தாய்மார்களைப்போல் மற்ற தேசங்களில் எவரும் தோன்றியதாகத் தெரியவில்லை. நமது நாட்டில் தோன்றிய ஞானிகள், பெரியோர்கள் மற்ற தேசங்களில் தோன்றினார்களா? தோன்றவில்லை.

நமது நாட்டில் தற்பொழுது பெண்மணிகளின் சுதந்திரம் மிகவும் பாதிக்கப்பட் டிருக்கின்றது. அவர் க்ளுக்குச் சரியான கல்வி கொடுக்கப்படுவதுமில்லை. அவர்கள் சரியான முறையில் பழக்கப்படுவது மில்லை. அதன் பயனாக ஆடவர்களும் பெண்மணிகளால் வீண் செலவுகளுக்கும், பலவித கஷ்டங்களுக்கும் ஆளாக்கப் படுகின்றனர். இந்திய மாதர்கள் சீர்திருத்தப்படாவிடில் அதனால் நமக்குப் பலவித இன்னல்கள் விளையுமென்பது திண்ணம். பழைய ஒழுக்கங்களை அனுஷ்டிக்கும்படி நமது மாதர்கள் வற்புறுத்தப்பட வேண்டும். மேல் நாட்டு நாகரீகம், நடையுடை பாவனை இவைகளை அவர் கள் சிறிதும் பின்பற்றலாகாது.

இந்திய மாதர்களின் முன்னேற்றத்தைக் கருதி அரும்பாடுபட்ட அன்னையார் ஸ்ரீமதி ராமாபாய் ரானடே என்பவர். அவரது சரித்திரத்தை அறிந்து கொள்ள வேண்டியது இந்தியப் பெண்மணிகளின் கடமை யாகும். இந்தியப் பெண்மணிகளைச் சீர்திருத்த ஸ்ரீமதி ராமாபாய் ரானடே போன்ற பல மாதர் திலகங்கள் முன்வர வேண்டுவது அவசியமாகும்.

விவாகமும் கல்வியும்.

ஸ்ரீமதி ராமாபாயிக்கு அவரது பதின்மூன்றாவது வயதிலேயே கலியாணம் நடைபெற்றது. காலஞ்சென்ற நீதிபதி ரானடே அவர்கள் இவரைத் தமது இரண்டா வது மனைவியாக மணந்து கொண்டார். கலியாணம் ஆவதற்கு முன்பு ஸ்ரீமதி ராமாபாய்க்கு அவரது பெற் றோர்கள் சரியான கல்வி போதிக்கவில்லை. நீதிபதி ரானடே அவர்கள் தமது மனைவிக்குக் கல்வி போதிக் கும் பொறுப்பையேற்று அவரைச் சரியான துறையில்

பயிலும்படிசெய்து வந்தார். ஸ்ரீமதி ராமபாயைத் தமது ஆருயிர்த்துணைவியாகச் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் நீதிபதி ரானடே அவர்களுக்கு அதிகமாக உண்டு. அதற்காகவே அவர் தமது மனைவியின் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்திவந்தார். அவர் மத விஷயத்திலும், சமூக விஷயத்திலும், தமக்கிருந்த விசால நோக்கங்களை ஒட்டி ராமாபாயின் அறிவைப் பெருக்கவும், குணத்தை விருத்திசெய்யவும் முயற்சி செய்தார். தமது கணவர் இறக்கும் வரையில் ஸ்ரீமதி ராமாபாய் வீட்டுக்குள்ளேயே அவருடன் பற்பல விஷயங்களைப் பற்றி அடிக்கடி வாதிப்பது வழக்கம். அக்காலத்தில் ஜனங்களிடையில் வைதிகமும் குறுகிய நோக்கமும், அதிகமாய் இருந்தன. பெண்கள் வீட்டைவிட்டுத் தெருவில் செல்லக்கூடாதென்ற கட்டுப்பாடும் பலமாய் இருந்தது. ரானடே தமது மனைவிக்குக் கல்வி போதிக்கும் விஷயத்தில் பட்டசிரமம் ஸ்ரீமதி ராமாபாய் எழுதியுள்ள ஞாபகக்குறிப்புகளால் நன்கு விளங்குகின்றது. ராமாபாய் படிப்பதை வீட்டிலுள்ள மாதர்கள் கண்டால் அவரை உபத்திரவப் படுத்தாமலிரார்கள். எனவே ராமபாய் தமது கணவரது அறையிலிருந்துகொண்டே அறிவைப் பெருக்கக்கூடிய நூல்களைப் படித்து தமது அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

கலியாணமான பல வருஷங்களுக்குப்பிறகு ஸ்ரீமதி ராமாபாய் ரானடே பண்டித ராமாபாய் என்பவருடன் பழகி அவரிடம் பலவுதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். இதற்காக வீட்டிலிருந்தவர்கள், தங்களைத் தொடக்கூடாதென்றும், வீட்டிலுள்ள பாத்திரங்களை எடுக்கக்கூடாதென்றும் அவரைத் தடுத்து உத்

திரவம் செய்தார்கள். தமது கணவரின் ஆதரவை நம்பி ராமாபாய் அந்தக் கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்து வந்தார். ஆனால் இவ்விதக் கஷ்டங்களுக்கிடையில் அவர் தாம் படிப்பதையும், தமது அறிவைப் பெருக்கிக் கொள்வதையும் விட்டாரில்லை. தமது கணவன் சென்ற இடங்களுக்கெல்லாம் அவரும் சென்றார். கல்வி அறிவுள்ள பல பெண்மணிகளுடன் அவர் பழகிப் பல விஷயங்களைப்பற்றித் அவர்களுடன் வாதித்து, பொது விஷயங்களைப்பற்றி தமது அபிப்பிராயங்களை அவர் வெளியிட்டு வந்தார். மராத்தி பாஷையில் நன்றாக எழுதவும், பேசவும் அவர் கற்றுக்கொண்டார். மராத்தி பாஷையில் உபந்யசிக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு.

1901-ம் வருஷம் அவரது கணவர் ஈசன் திருவடி சேர்ந்தார். கணவரைப் பிரிந்த துக்கம் அவர் இறந்த ஒரு வருஷம் வரையில் அவரை வருத்தியது. அதன் பயனாக அவர் வீட்டைவிட்டு வெளியில் செல்லவே யில்லை. பின்பு அவர் தமது தத்துப்புத்திரியுடன் பூனா நகருக்குச்சென்று, தமது நாயகனுக்குப் பிரியமுள்ள வேலைகளைச் செய்வதே தமது கடமையெனக் கொண்டு சமூக ஊழியம் செய்வதற்கு ஆரம்பித்தார். அப்பொழுது பூனாநகரம் வைதிகர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபடியால் அது இவரது வேலைக்குப் பெருந்தடையாய் இருந்தது. ஆனால் அவர் விடாமுயற்சியுடனும் தைரியத்துடனும், தமது வேலையைச்செய்ய ஆரம்பித்தார். ஸ்ரீமதி ராமாபாய் சாதாரணமான உடை தரிப்பவர்; ஆடம்பரமற்றவர். பெண்களுக்கு அரண்களான நாணம், அச்சம் முதலிய குணங்கள் அவரிடம் சிறந்து

விளங்கின. ஆயினும் அவர் தமது வேலையை உறுதியான தைரியத்துடன் செய்துவந்தார்.

பூனமாதர் சமாஜம்.

முதல் முதலில் அவர் பூனவிலுள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்தைக் கருதி அங்கே மாதர்களின் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தார். அந்த சமாஜத்தில் எழுதப்படிக்கத் தெரியாத பெண்மணிகளுக்கும், விதவைகளுக்கும் கல்வி போதிப்பதற்காகப் பல வகுப்புகளை ஏற்படுத்தினார். ஸ்ரீமான் பி. எம். மலபார்ஜி என்பவர் "சேவசாதன்" என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்த காலத்தில் ஸ்ரீமதி ராமாபாய் அந்தச் சங்கத்தின் தலைவியாக இருந்து, கடைசிவரையில் அதற்காகப் பெரிதும் உழைத்து வந்தார். பின்பு அவர் பலவிடங்களில் மாதர்களைச் சங்கங்களை ஸ்தாபித்து அவைகளில் பெண்மணிகளுக்கு வேண்டிய கல்வி போதிக்க ஏற்பாடு செய்தார். பெண்மக்களுக்குக் கல்வி போதிக்கும் விஷயமாக அவர் தமது உயிரையும் அர்ப்பணம் செய்தாரென்றே சொல்லலாம். பம்பாய், பூன முதலிய நகரங்களிலுள்ள பல மாதர் சங்கங்களிலும், அங்கே நடந்த இயக்கத்திலும் அவர் கலந்து உழைத்துவந்தார். சபைகளை ஏற்படுத்தி அவைகளை ஒழுங்காக நடத்தும் திறமையும், தலைமை வகித்து அவைகளை நடத்தும் ஆற்றலும் அவர்பால் சிறந்துவிளங்கின. பூனநகரத்தில் பெண்களுக்குக் கட்டாயக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் நடத்தப்பட்ட கிளர்ச்சியில் அவர் கலந்து உழைத்தார். பெண்மணிகளுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்ற போராட்டத்தையும் அவர் தீவிரமாக நடத்தினார். ஓய்வு நேரத்தில் பெண்மணிகள் மற்றவர்களுக்

குச் செய்யவேண்டிய ஊழியத்தை அவர் தமது வாழ்க்கையின் மூலம் நன்கு விளக்கிவிட்டார்.

மாதர்களுக்காக ஸ்ரீமதி ராமாபாய் செய்துள்ள ஊழியம் அளவிடக் கூடியதல்ல. இன்று உயர்ந்த நிலைமையில் சிறப்புடன் நடைபெற்று வரும் "பூனா சேவ சாதன்" இவரது அரிய ஊழியத்தின் பயனாகவே அந்த உயர்ந்த நிலைமையை அடைந்திருக்கின்றது.

சமூக ஊழியம்.

1907-ம் வருஷத்தில் பிளேக் என்ற கொள்ளை நோய் பரவாமலிருக்க ஸ்ரீமான்கள் கோகலே, தேவதார் அவர்கள்செய்த பெருமுயற்சியில் ஸ்ரீமதி ராமாபாயும் இவரைச்சேர்ந்த பெண் தொண்டர்களும் செய்த ஊழியம் மறக்கக்கூடியதல்ல. 1918—19-ல் ஐக்கிய மாகாணம் எங்கும் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்ச நிவாரணவேலை செய்வதற்காக ஸ்ரீமான் தேவதார் பூனா சேவசாதனத்தைச் சேர்ந்த பெண்தொண்டர்களையே அங்கு அழைத்துச்சென்று பஞ்சக்கஷ்ட நிவாரண வேலைகளைச் செய்தார்.

நோயாளிக்கு வைத்திய உதவி.

ஆஸ்பத்திரிகளுக்கு அடிக்கடி ஸ்ரீமதி ராமாபாய் சென்று அங்கேயுள்ள நோயாளிகளுக்கு வேண்டிய உதவிகளை விருப்புடன் செய்வதுவழக்கம். 1911-ம் வருஷம் தாதித் தொழிலில் பயிற்சி பெறுவதற்காக அவர் சில பெண்மணிகளை சாசூன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார். இப்பொழுது அவரது முயற்சியின் பயனாக 50 தாதிகளும், மருத்துவத் தொழிலில் பயிற்சிபெற்ற 50 பெண்மணிகளும் பூனாசேவ

தான் சபையிலிருந்து கொண்டே சமூக ஊழியம் செய்து வருகின்றார்கள். ஸ்ரீமதி ராமாபாய் இத்துடன் நின்றுவிடாமல் சிறைச்சாலைகளில் பலவித கஷ்டங்களை அனுபவித்துவரும் பெண் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் பொருட்டு எரவாடா சிறைச்சாலைக்கு மாதத்திற்கிருமுறை சென்று அங்கு அவர்களுக்கு நல்லபோதனை அளித்து வந்தார். பெண்களின் முன்னேற்றத்திற்காக இன்னும் அவர் செய்துள்ள ஊழியம் எண்ணில். ஸ்ரீமதி ராமாபாய் இறந்த பொழுது பூனா சேவசாதனத்தில் 1000 பெண்மணிகள் வரையில் சமூக ஊழியம் செய்ய இருந்தனர். எனவே கல்வி அறிவுள்ள மாதர்கள் ஸ்ரீமதி ராமாபாய் விட்டுவிட்டுப்போன தொண்டை விடாமல் நடத்திவர வேண்டியது அவசியம். அவரது முறைகள் நாட்டில் பரவினாலன்றி இந்திய மாதர் சமூகம் சீர்திருந்தாது என்பதில் ஐயமில்லை. மாதர்கள் சீர்திருத்தப்பட்டால் இந்தியா தேசமே புத்துயிர் பெறும். இந்திய மக்கள் அறிவு, ஆற்றல், வீரம் முதலிய குணங்களால் சிறந்து விளங்குவார்கள். இந்தியாவைப் பிடித்துள்ள பல கஷ்டங்களும் நீங்கிவிடும்.

சுபம்.

---

(1) என்றும் நல்லோரைத் தஞ்சமாக அடைதல் வேண்டும். தீயோரை நஞ்சாக எண்ணி விலக்கவேண்டும்.

(2) மனம் போனபடி நடப்பவன் மாளாத துன்பத்தை அடைவானாதலால் கரையைக் கடவாதிருக்கும் கடலைப்போல் சாஸ்திரவரம்பு கடவாதிருக்கவேண்டும்.

தோதாஜி

அல்லது

அன்புள்ள அடிமை

மலைகளில் மனம் வந்தபடி திரிந்து, முரட்டுத்தன மான செய்கைகளையே செய்துவந்த ராஷ்ட்ரகூட ஜாதி யாரை அடக்கிச் சிறந்த யுத்தவீரர்களாகச் செய்தவர் சிவாஜி என்பவர். சிவாஜியின் குமாரன் சம்பாஜி. சிவாஜி யைப்போல் மூன்று மடங்கு பலமுடையவன் சம்பாஜி என்பவன். புலிக்குப் பிறந்தது பூனையாவதுண்டோ? அதிக தைரியசாலி; எதற்கும் அஞ்சாத தீரன்; மல்யுத் தத்தில் முதன்மைப்பட்டவன். பாற்கடலிலும் விஷம் தோன்றினதற்கொப்ப, சம்பாஜியினிடம் கள் குடிக் கும் கொடிய பழக்கமும், பிறர்மனை விரும்பும் கெட்ட கடத்தையும் குடிகொண்டிருந்தன.

ஒருநாள் இராஜசபையில் எல்லோரும் வீற்றிருந் தனர். சிவாஜியும் தமது வீரமைந்தனை சம்பாஜியுடன் உட்கார்ந்திருந்தார். அக்காலத்தில் சம்பாஜிக்குச் சுமார் இருபத்திரண்டு வயதே நிறைந்திருந்தது. அவர்கள் முன்னிலையில் இரண்டு மல்லர்கள் தங்களுடைய சாமர்த் யத்தைக் காட்டி எல்லோரையும் களிக்கச் செய்தனர். ஒருவன் தன் திறத்தைக்காட்டித் தன்னுடைய ஆசனத் தமர்ந்தான். மற்றொருவனோ தன்னைப்பற்றி வெகு வாகப் புகழ்ந்துகொண்டு நின்றான்; தன்னோடு மல் யுத்தம் புரிபவர் இப்புவனத்திலேயே இல்லையென்றும் சொன்னான்.

எதற்கும் ஓர் அளவுண்டு. அமிர்தமும் அளவுக்கு மிஞ்சினால் ஆலமாகுமன்றோ? (விஷமாகும்) அவனது நெடுமொழிகளைப்பொறாத சம்பாஜி தன்ஆசனத்தைவிட்டெழுந்து, கீழேயிறங்கி, "வீரனே! நெடுமொழியோட்டாதே. நீ வாயினால் யுத்தம் புரிகின்றவனென்று எனக்குத் தெரிகின்றது. என்னோடு யுத்தம் புரிவதற்குச் சித்தமாயிரு" என்று கூறியவாறே அவன்பக்கம்போனான். மல்லனும் சம்பாஜியை ஏற இறங்கப் பார்த்தான்; அவனைப் பரிகசிப்பதுபோல் சிரித்துக்கொண்டு பார்த்தானே யொழிய சிறிதும் பயப்படவில்லை; "பையா! பட்டு மெத்தையில் புரளுவதைப் போலிராது இநத மல்யுத்தம். உன்னுடன் யான் யுத்தம் புரிவேனானால் என் கீர்த்திக்கும் அபகீர்த்தி நேரிடும்." என்று கூறிக்கொண்டே சிரித்தான். சம்பாஜி "என்ன சொன்னாய்? என் உருவத்தைப் பார்த்தா பரிகசித்தனை? கண்டவுடன் பாய்ந்து மத்தகத்தைப் பிளக்கும் சிங்கக்குட்டி எத்தனை சிறியது? மத்தகம் பிளவுபட்டுத் தரையில் உருண்டுகிடக்கும் யானை எத்தனை பெரியது?" என்று கோபத்துடன் சொன்னான்.

மேன்மேலும் வார்த்தைகள் வளர்ந்துகொண்டே போயின. பின் சம்பாஜியினுடன் யுத்தம் புரிந்தே ஆகவேண்டும் என்று மல்லன் எண்ணினான்; ஆனால் சிறிய பையனுடனா யுத்தம் புரிவதென அதைதருணத்தில் எண்ணினான். இந்தக் காட்சியைக் காண்பதற்கெனக் கூடியிருந்த பலரும் மல்லனே ஜயிப்பானென நிச்சயித்தனர். அவர்களவ்வாறு நிச்சயிப்பதற்குக் காரணங்கள் பலவிருந்தன. மல்லன் அகன்று திரண்டுருண்ட புயங்களுடையவன். பதினைந்து வருஷங்களுக்கு

மேற்பட்ட மல்யுத்தப் பயிற்சியுண்டவனுக்கு. சம்பாஜியோ இளைஞன்; மல்யுத்தத்தில் தேர்ந்திருந்தாலும், பெரிய அரங்குகளில் யுத்தம் புரிந்தவனல்லன். வயதிற்குறைந்தவனே யொழிய மற்றெல்லா அங்கங்களிலும் அவன் மல்லனுக்குச் சமானமானவனாக இருந்தான். சில முதியவர்கள் மாத்திரம், யுத்தத்தின் பயனாக வெற்றியைச் சந்தேகத்தில் நிறுத்தாமல் சம்பாஜியின் பக்கமே வைத்தனர்.

இருவரும் இவ்வாறு சித்தமானதும் யுத்தம் ஆரம்பமாயிற்று. ஆரம்பமான யுத்தம் நெடுநேரம் நீடிக்கவில்லை. சம்பாஜி அந்த யுத்தத்திற்குச் சீக்கிரத்தில் ஒரு முடிவையுண்டாக்கினான்! "அடே மல்லகஜெட்டி! உன் குலதேவதையை ஒரு தரம் நினைத்துக்கொள். உன் ஆவி உனதுடலை விட்டுப் பிரியும் நேரம் சமீபிக்கின்றது" என்றான். உடனே பயில்வானின் இருகைகளும் அதிசாதுர்யமாகப் பிடிக்கப்பட்டன. மறுகணத்தில் மல்லன் மண்ணின்மேல் சாய்ந்தான். கொஞ்சமும் தாமதியாமல் மல்லனின் மார்பில் சம்பாஜி உட்கார்ந்தான்; ஒரு குத்துக் குத்தினான்; உடனே அப்பயில்வான் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு இறந்தான்.

அவ்வரங்கில் கூடியிருந்த பலருள்ளும் இறந்த மல்லனின் மகனும், மகளும், மருமகனுமே வருத்தப்பட்டவர்களாவர். மகனின், துக்கமும் கோபமும் அதிகமாக அதிகமாக அவன் சம்பாஜியைப் பழிக்குப்பழியாகக் கொல்லவேண்டுமெனச் சபதஞ்செய்துகொண்டான்; பின் அவனை எவ்விதம் கொல்லலாமென நெடுநேரம் ஆலோசித்து ஒரு வழியைக் கண்டு பிடித்தான்; சம்பாஜியின்

ஊழியர்களாகவே யிருந்து, சமயம் பார்த்து அவனைக் கொல்வதெனத் தீர்மானித்தான்.

பின் சிலநாட்களுக்கெல்லாம் சிவாஜி இறந்தார். சம்பாஜிக்குத் தோதாஜி என்னுமொரு மெய்க்காவலாள் இருந்தான். தோதாஜி ஓர் அடிமை; அவன் எப்போதும் தன் எஜமானனைக்கண்ணைக்காக்கும்இமையைப்போல் காத்து வந்தான். தனது எஜமானனது உயிர் அவனுக்குப் பெரிதே யொழிய தன்னுயிரையாவது தன் சுகத்தையாவது அவன் கவனிப்பதில்லை. தோதாஜி இருக்கும் வரையில் சம்பாஜிக்கு யாதொரு தீங்கும் நேரிடவேயில்லை. ஏனெனில் அவன் சம்பாஜியின் உயிர்க்கே ஒரு கவசம் போல் இருந்தான். ஆதலால் தோதாஜியை சம்பாஜியைவிட்டுப் பிரிப்பதே அவனுடைய முக்கிய காரியமாயிருந்தது.

வஞ்சகமான செய்கைகளையே செய்யப் புறப்பட்டவர்களுக்கு எதுதான் அரிது? பின் அவன் ஒரு பொய்யைப் புழுகி, தோதாஜியை அவனது தாய் தந்தையர்களது வீட்டிற்கனுப்பினான்.

அப்பால் அவன் மல்லனுடைய மருமகனுடன் சேர்ந்து சம்பாஜியை வேட்டையாடக் காட்டிற்கு அழைத்துச் சென்றான். மூவரும் வனத்தில் நுழைந்து வேட்டையாடினர். வரிப்புலியொன்று எதிர்ப்பட்டது. எதிர்ப்பட்டதும், முன்பே செய்துகொண்ட சங்கேதப்படி பின்னிருந்த துரோகிகள் இருவரும் சம்பாஜியைத் தனியே விட்டு விட்டு மரமொன்றின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டனர். தனியே விடப்பட்ட சம்பாஜி சிறிதும் அஞ்சவில்லை; ஆனால் அவர்களுடைய துரோக சிந்தனையை மாத்திரம் அறிந்துகொண்டான். புலியோ

உறுமிக்கொண்டு நெருங்கி வந்துகொண்டிருந்தது. சம்பாஜி தன் கையிலிருந்த சிறிய ஈட்டியை அதன்மேல் எறிந்தான். அது புலியின் தலையில் சிறிய காயத்தை உண்டாக்கிச் சென்றது. பின்னால் புலி அதிக உக்கிரத்தோடு குதிரையின்மேற் பாய்ந்து ஓர் அறையில் குதிரையைக் கீழே வீழ்த்தியது. சம்பாஜியினிடம் கத்தியைத் தவிர்த்து வேறு ஆயுதமில்லை. அவன் புலியின் உயிராவது போகவேண்டும் தனது உயிராவது போக வேண்டும் என்று நினைத்தான். கத்தியை ஓங்கி அதன் தலையில் அடிக்கவும் மண்டையும் பிளந்தது ; கத்தியும் உடைந்தது. புலியோ மண்டையுடைந்து உதிரம் ஆறாய்ப் பெருகுவதையும் பொருட்படுத்தாமல் சம்பாஜியின்மேல் பாயத் தொடங்கியது. புலியைப்போல் நிராயுதபாணியாயிருந்த சம்பாஜி பயங்கரமான எதிரியாய் வந்த அதனுடன் மல்ல யுத்தம் புரிய நேர்ந்தது. "சமயத்தில் தைரியத்தைக் கைவிடாமல், அப்புலியின் முன்னங்கால்களைப்பற்றி, மார்பு பிளவுபடும்படி அதைக் கிழித்தெறிவதே யுக்தமானது" என்று மனத்தில் எண்ணினான். எண்ணியவுடனே, அவன் அப்புலியின்மேல் மற்றொரு புலியைப்போற் பாய்ந்தான்; அதனுடன் ஐந்து நிமிஷம் பலமாகப் போர்செய்தான். ஈட்டியின் குத்தாலும், கத்தியின் அடியாலும் பெரிதும் அலுப்புற்றிருந்த அப்புலி பின்னடையத் தொடங்கிற்று. அச்சமயம் பார்த்து அவன் அதன் முன்னங்கால்களைப் பிடித்துக் கிழிக்கச் சித்தமாயிருந்தான்.

அவ்வாறு அவன் தன் கோரமான விரோதியைக் கொன்று மனவாறுதலடைந்து சந்தோஷிக்கும் சமயத்தில், அவன் மனம் பின்னும் மகிழ்ச்சி கொள்ளும்

படி ஒரு மனிதன் குரல் அவன் காதில் விழுந்தது. "ப்ரபோ! தைரியமாக அப்புலியைப் பிடித்திருங்கள். இதோ வந்தேன்" என்று தோதாஜி உருவிய ஈட்டியுடன் குதிரையின்மேல் வந்துகொண்டிருந்தான். சம்பாஜியைக் கிட்டியதும் தன் பாலாவைப் புலியின் மருங்கில் செருகினன். அதுவும் இடியைப்போல் உறுமிக் கீழே விழுந்து புரண்டது. இரும்புப் பலகையையொத்த தன் கையினுல் தோதாஜி அதை அறைய அது இரத்தத்தைக் கக்கிக்கொண்டு உயிர் துறந்தது.

தன் உயிருக்கே ஒரு கூற்ருய் வந்த புலியின் கதி இவ்வாறு முடிந்ததைக் கண்ட சம்பாஜி சந்தோஷப்பட்டு, "தோதாஜி! நீ ஊருக்குச்சென்றுயே. அங்கு எல்லோரும் சௌக்கியமா?" என்று வினவினன். தோதாஜி "அண்ணலே! நாமிருவரும் வஞ்சிக்கப்பட்டோம். யாரால் என்பது உமக்கே தெரியும்" என்று வணக்கமாகச் சொன்னன். சம்பாஜி "ஆமாம், தோதாஜி. மல்லனின் மகனும் மருமகனும் நம்மை வஞ்சித்தனர்; என்னை அவர்கள் புலிவாயிலும் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டனர். ஆனல், கடவுள் மாத்திரம் என்னைக் கைவிட்டிலர். அவர் சமயத்தில் உன்னை அழைத்துவந்து என்னைக் காப்பாற்றினர். இதனல், அவரை நம்பினோர் என்றும் கைவிடப்படார் என்பது தெரிகின்றது?" என்றான். தோதாஜி "ஆம்; மஹாராஜாவே! நல்லோரைக் காக்கும் கடவுள் தீயோரைத் தண்டியாமலிரார் என்பதை அறிந்துகொள்ளுநம்." என்று கூறிச் சம்பாஜியுடன் அவர்கள் ஏறியிருந்த மரத்தருகிற்குச் சென்றான். இவர்கள் வருவதைக்கண்டதே அவர்கள் சிம்ம சொப்பனங் கண்ட யானையைப்போல் நடுங்கி ஆயுதங்களையும் கீழே

ஏறிந்துவிட்டனர். மரத்தைக்கிட்டியதும் தோதாஜி மேலேறி அவர்களில் ஆளுக்கொரு அறைகொடுத்தான். இருவரும் இரத்தத்தைக்கக்கிக்கொண்டே கீழேவிழுந்து இறந்தனர். பின் சம்பாஜியும் தோதாஜியும் ஊரை யடைந்தனர்.

தந்தை, தமையன் தன்னைத் தாலிகட்டிய நாயகன் இவர்கள் யாவரும் இறக்கக் காரணமாயிருந்தவன் சம்பாஜி யென்பதை யறிந்துகொண்ட மல்லனுடைய மக ளின் கோபம் கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப்போல் அதிகரிக்கத்தொடங்கியது. தன் குலத்தையே வேரோடு களைந்த சம்பாஜியை எவ்விதத்திலும் கொல்வதே சரியான காரியமென்று அவள் தீர்மானித்துக் கொண் டாள். காரியத்தை முடிக்க அவளுடைய அழகும், சம்பாஜியின் குடியும் அவளுக்குச் சாதகமாயிருந்தன. அவள் தன் காமவலையில் சம்பாஜி யென்னும் சிங்கத் தைச் சிக்கச்செய்தாள். அவனும் வெகு சுலபத்தில் அவளது தந்திரவலையிற் சிக்கிச் சதாகாலமும் அவள் வீட்டிலேயே வசித்து வரலாயினன். பின் அவள் பழி வாங்கத்தகுந்த ஒரு சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டி ருந்தாள்.

இவ்வாறிருக்கையில் ஔரங்கஜேப் என்னும் மொகலாய சக்ரவர்த்தி மகாராஷ்ட்ர தேசத்தின்மீது படை யெடுத்து வந்தான். இப்போது சிவாஜி இறந்து நெடு நாட்களாயின. ஔரங்கஜேபை எதிர்க்கத்தகுந்த ஆற் றல்படைத்த வீரர்களை நடத்தும் தளகர்த்தர்களில் ஒரு வரேனும் பிழைத்திலர். சம்பாஜி தன்வரையிலும் பராக் ரமசாலியே; தைரியம் மிகுந்தவனே; ஆனால் தக்க தளகர்த்தர்களை ஏவி, நாட்டை த்வம்சம் செய்யும்

மொகலாயனைத் துரத்தப் போதுமான சௌரியம் மிக்கவனல்லன். காமசாகரத்தில் மூழ்கிக் குடிப்பதிலேயே காலங்கழித்துக் கொண்டிருந்தானாதலால் வந்தெதிர்த்த மொகலாயன் தடுப்பாரின்றி உள்ளே பிரவேசித்து, நாட்டையும் தன் சுவாதீனப் படுத்திக்கொண்டான்; சம்பாஜியைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தக்க பரிசு கொடுக்கப்படும் என்று பறையறைவித்தான்.

தாசியின் மனோரதம் நிறைவேறுங் காலம் நெருங்கிவிட்டது. தன் வீடே சதமென எண்ணிக்கிடக்கும் சம்பாஜிக்கு அவள் மிதமிஞ்சிய சாராயத்தைக் குடிப்பித்தாள்; ஔரங்கசேஜபின் ஆட்களிடமும் இரகஸ்யமாகத் தெரிவித்து விட்டாள். அவர்களும் தோதாஜியை ஏமாற்றி அவனை ஓர் உபாயத்தால் அவன் ஊருக்கனுப்பி விட்டனர். அவன் சென்றுவிட்டதே போர் வீரர்கள் சம்பாஜியைக் கைதுசெய்யத் தாசியின் வீட்டில் வந்து நிறைந்தனர். அவள் அவர்களுக்கெல்லாம் ஒரு சாக்குச் சொல்லிப் பிற்பகலில் வரும்படி அனுப்பி விட்டனள். அவர்களிற் சிலர் தவிர மற்றையோர் சென்றுவிட்டனர்.

பழிவாங்கத் தகுந்த சமயம் அதுவே யென்று நினைத்த அவள் நீண்ட கத்தியொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு சம்பாஜி படுத்திருந்த அறையில் நுழைந்தாள். தன் வம்சத்தார் கொல்லப்பட்டதை நினைத்துக்கொண்டாள். அவளுக்கு அடக்கமுடியாத கோபம் உண்டாயிற்று. கட்குடித்துப் புரண்டு கொண்டிருந்த சம்பாஜியை யணுகினாள்; நீண்ட கத்தியைத் தூக்கி, ' சம்பாஜி! அநியாயமான கொலைகளுக்குப் பதில்

கொலை'' என்று கூறிக்கொண்டே, அவனுடைய மார் பிற் குத்தினாள். அம்மார்பில் அது ஓர் அங்குலமேனும் பாயவில்லை. சம்பாஜி அடிபட்டவுடன் தெளிந்து எழுந்தான். அவ்வஞ்சகிசெய்த சதி அவனுக்குப் புலப் பட்டுவிட்டது. அவன் உடனே உருத்திர மூர்த்தியைப் போலக் கோபித்து அவளது இருகைகளையும் பிடித்து அவளைச் சுவரில் மோதினான். அவள் உடல் சிதைந்து பிணமாய்க் கீழே விழுந்தாள். இதற்குள் வெளியே யிருந்த ஆட்கள் உள்ளேவந்து சம்பாஜியைப் பிடித்துக் கொண்டு ஔரங்கஜேபினிடம் கொண்டு போயினர்.

குடிவெறிகொண்ட சம்பாஜியை ஐந்நூறு வீரர்கள் நடத்திக்கொண்டு போனார்கள். அப்பொழுது அவர்க ளுக்கு எதிரில் ஒரு குதிரை வீரன் வந்தான். அவனது கண்கள் கோவைக்கனி போல் சிவந்திருந்தன. அவன் எதிரேவருபவர்கள் யுத்தவீரர்களென்று கவனித் தானில்லை. தான் ஒருவனேயென்றும் சிந்தித்தானில்லை. அவன் தன் எஜமானன் ஒருவனையேபார்த்தான். அவன் தன் எஜமானனை எவ்விதத்திலும் காக்கவேண்டு மென்பதைக் கருதினான். அவ்வளவு வேகமாக வந்த அவன் கூட்டத்தின் நடுவில் பாய்ந்தான். அவர்கள் அவ னைத் தடுக்க முடியாமல் வழிவிட்டு விலகினர். மறு கணத்தில் வீரர்கள் கரணைகரணையாக உருண்டு வீழத் தொடங்கினர். தோதாஜி எமனைப்போல் சுழன்று, எல்லோரையும் சேதித்து உயிரை வெளவி வந்தான். சம்பாஜியின்கைகளில் விலங்கிடப்பட்டிருந்ததால் அவன் ஒன்றும் செய்யமுடியாமல் தன் அடிமையின் விசு வாசத்தை வியந்துகொண்டே சும்மா நிற்கவேண்டியதா யிருந்தது. தோதாஜியின் அடியைத் தாங்கமாட்டாமல்

எதிரிகளிற் பாதிப்பேர் இறந்தனர். பாதிப்பேர் பயத்தால் ஓடினர். மிகுந்திருந்த சிலரில் ஒரு படாணித் துலுக்கன் தோராஜியின் முதுகிற் குத்திவிட்டான். குத்து பலமாகப் படவே அவன் குதிரைமேற் சாய்ந்தான். அவன் கையினின்றும் கத்தியும் நழுவியது. வாயினின்றும் குளறிய சொற்களும் புறப்பட்டன "ப்ரபுவே என் உயிருள்ள வரையும் தங்களது மேனிக்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் பாதுகாத்து வந்தேன்! இப்போது, ஐயோ! நான் குத்தப்பட்டேன். ஆதலால் இன்னும் சிறிது நாழிகைக்குள் உம்மைவிட்டுப்பிரியப் போகின்றேன். இனி, கடவுள்தான் தங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறிக்கொண்டே குதிரையின் மேலேயே உயிரைவிட்டான். தன் தகப்பனை சிவாஜி இறந்தபோதும் அவ்வளவு உருக்கமாக அழாத சம்பாஜி அருமையான தன் அடிமை இறந்ததைக் கண்டு தன் விரோதிகளும் மனமிரங்கும்படி கதறினான்.

பிள்ளைகளே! இக்கதையால் நீங்கள் அறிந்து கொள்வதென்ன? அடிமையின் அன்பைப்பார்த்தீர்களா? அவன் தன் உயிரை எதற்காகப் பாதுகாத்து வந்தான்? தன் எஜமானனுக்காகவன்றோ? நீங்களும் உங்களுடைய பெரியோர்களிடம் அன்பாக நடந்து கொள்ளவேண்டும். சம்பாஜி பெரியவீரனாயிருந்தும் பகைவரிடமகப்பட்டதேன்? பாழுங்குடியினாலன்றோ? ஆதலின் குடி குடியைக் கெடுக்கும் என்பது திண்ணமென்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

ஒரு கிழவனும் கிருஷ்ணனும்.

ஒரு காலத்தில் ஒரு கிழட்டுப் பிராஹ்மணன் இருந்தான். இவன் தான் ஒரு மகா பக்தன் என்று பிறர் நம்பும் வண்ணம் நடிப்பது வழக்கம்; அவன் யாது செய்தாலும், "ஹரி, ஹரி, கிருஷ்ணா, இது நினது செயல்" என்று சொல்வது வழக்கம். ஒரு நாள் அவனுடைய மனைவி அவனுடைய வீட்டு வாசலில் கொஞ்சம் நெல்லைக் கொட்டி உலரும் பொருட்டு விரித்து வைத்திருந்தாள். தெருவில் போய்க்கொண்டிருந்த ஒரு பசுவானது அந்த நெல்லைத் தின்றது. இதைப் பார்த்த அந்தக் கிழட்டுப் பிராஹ்மணன் கையில் ஒரு தடியுடன் ஓடிவந்து அந்தப் பசுவை நையப் புடைத்தான். உடனே அது இறந்து விட்டது. பிராஹ்மணன் "ஹரி, ஹரி, கிருஷ்ணா, இது நினது செயல்" என்றான். துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணனுடன் கூட இருந்த ருக்மிணியானவள் கிருஷ்ணனைப் பார்த்து "ஆ! பிரபுவே, தங்களை இப்பொழுது ஒரு மகா பாபமானது பிடித்துக்கொண்டது" என்றாள். ஸ்ரீ கிருஷ்ணன் அவளைப் பார்த்து "நீ சற்றும் பயப்படவேண்டாம். பசுவைக் கொன்ற பாபம் பிராஹ்மணனுடையதே யொழிய என்னுடையதன்று; சீக்கிரத்தில் ருசுப் படுத்துகிறேன்" என்றார்.

சின்னாட்களுக்குப் பிறகு ஒருநாள் அந்தக் கிழட்டு பிராஹ்மணன் அநேக பிராஹ்மணர்களை அழைத்து அவர்களுக்குப் பிராஹ்மண போஜனம் செய்வித்தான். ஸ்ரீ கிருஷ்ணனும் ஒரு கிழப்பிராஹ்மணனைப்போல் உருக்கொண்டு பிராஹ்மண போஜனம் நடக்கும் கிரகத்திற்குள் சென்று அங்கும் இங்கும் எங்குப்பார்த்தாலும்

எச்சிலைத் துப்பிவைத்து அந்த இடத்தை அசுத்தமாக்கி விட்டார். வீட்டுக்காரனாகிய கிழவன் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து " சீ, சீ நீ வெளியில் போய்விடு; நான் செய்த தர்மத்திற்கு இது தானா பிரதிபலன்?" என்று கூச்ச விட்டான். ஸ்ரீகிருஷ்ணன் உடனே "நீ யார் கேட்ப தற்கு? இந்தப் பிராஹ்மண போஜனத்திற்குக் கர்த்தா நீயோ?" என்றார். இப்படிக் கேட்கவும், கிழட்டு பிராஹ் மணனுக்குக் கோபம் அதிகரித்து விட்டது; அவன் " நான் கர்த்தாவோ ? அல்லவோ? இப்பொழுது காட்டு கிறேன், பார்" என்று ஸ்ரீகிருஷ்ணனுக்குச் சமீபத்தில் வந்து அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் தனது ஸ்வ ரூபத்தை அவனுக்குக் காண்பித்து " இந்த பிராஹ் மண போஜனம் செய்விப்பவன் நீ; அன்று பசுவைக் கொன்றவன் நான்; அல்லவா ? நன்மைக்கு நீயும் தீமைக்கு நானுமா ? நல்லது இரண்டையும் நீயே வைத் துக்கொள்" என்று சொல்லி மறைந்து விட்டார்.

இக்கதா நாயகனாகிய பிராஹ்மணனைப் போலவே, நாமும் செய்யும் காரியங்களில் வெற்றிக்குக் காரணம் நாமென்றும் தோல்விக்குக் காரணம் ஈச்வரனென்றும் நினைக்கிறோமல்லவா ? இது தான் உலக சுபாவம் !

ஒரு பெண்ணின் சாமர்த்தியம்.

ஒரு பெண் ஒருதினம் லண்டனிலுள்ள ஒரு கடை யில் ஏராளமான பட்டு வஸ்திரங்கள் வாங்கிக்கொண்டு அதன் விலைக்கு ஓர் உண்டியல் கொடுத்தாள். இவள் உண்மையாகப் பணக்காரன் மனைவியா அல்லது ஏமாற்று

பவளா என்பதை அறியும் பொருட்டு ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர் அவள் வந்த இயந்திர வண்டியிலேயே அவளுடன் அனுப்பப் பெற்றார். ஓர் அழகிய மாளிகையின் வாயிலில் வந்து இயந்திரவண்டி நின்றது. உடனே அப்பெண் வண்டியினின்று இறங்கித் தன் கணவனைக் கூப்பிடுபவள் போல் மாளிகையினுள் சென்றாள். போலீஸ் அதிகாரி இயந்திர வண்டியிலேயே இருந்தார். அம்மாளிகை உண்மையில் அவள் வீடல்ல, ஒரு தனி நபருக்குச் சொந்தமான பைத்தியக்கார ஆஸ்பத்திரி. அவள் உட்சென்றதும் அவ்வாஸ்பத்திரி அதிகாரியிடம் தனது கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றும் அவர் வெளியில் இயந்திரவண்டியில் இருக்கிறாரென்றும் அவர் போலீஸ் அதிகாரியென நடிக்கிறாரென்றும் கூறினாள். உடனே இரு தடியர்கள் வெளிச்சென்று இயந்திரவண்டியிலிருந்தவரைப் பிடித்துவந்து ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். அவர், தான் போலீஸ் அதிகாரியென்று எவ்வளவோ கூறியும் பயனில்லாமற் போயிற்று. அப்பெண் பின்னர் வெளிவந்து அந்த இயந்திர வண்டியிலேறிச்சென்றுவிட்டாள். இவ்வுண்மை தெரிந்து போலீஸ் அதிகாரி விடுதலை யாவதற்குள் பல தினங்க ளாய்விட்டன. (லக்ஷ்மி)

---

(1) தொடங்கியதொழில் எதுவாயினும் அதிற் பொறுமையாய் விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டும். அப்போதுதான் நன்மையுண்டாகும். பொறுமையுடையவனே பெருமையடைவான்.

(2) இறுமாப்புக் கொண்டவன் அல்லல் அடைவான். என்றும் இறுமாப்புக்கு இடந்தராதே!